பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

17 07 2024 6 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சர்வதேச சந்தைகளில் இந்தியாவின் மதிப்பு அதிகரித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2. நிதி ஆயோக் அமைப்பை மத்திய அரசு மாற்றியமைத்துள்ளது.

3. கர்நாடக அணைகளில் இருந்து காவிரியில் திறக்கப்படும் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

4. மின்கட்டண உயர்வை தமிழக அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

5. தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் கோவை அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் திருச்சி அணியை வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

சர்வதேச சந்தைகளில் இந்தியாவின் மதிப்பு அதிகரித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

உற்பத்திக்கான இந்தியா இயக்கம் எவ்வாறு நாட்டின் பொருளாதாரத்தை உலக அரங்கிற்கு கொண்டு சென்றுள்ளது என்பதை பிரதமர் சமூக ஊடகங்கள் வாயிலாக பகிர்ந்துள்ளார்.

இங்கிலாந்து, ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கு இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட சைக்கிள்கள் ஏற்றுமதி அதிகரித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச சந்தைகளில் இந்தியாவின் செல்வாக்கு அதிகரித்து வருவதையே இந்த வளர்ச்சி எடுத்துக்காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பீஹார் மாநிலத்தில் தயாரிக்கப்பட்ட காலனிகள் ரஷ்ய ராணுவத்தின் ஒரு பகுதியாக மாறி இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ள பிரதமர், இந்திய தயாரிப்புகள் மீது சர்வதேச அளவில் வளர்ந்து வரும் எதிர்பார்ப்பை இவை எடுத்துக்காட்டுவதாக கூறியுள்ளார்.

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியின்போது கஷ்மீரில் தயாரிக்கப்படும் கிரிக்கெட் மட்டைகளுக்கு அதிக தேவை இருந்தது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

இந்தியா – ரஷ்யா கூட்டுத் தயாரிப்பில் உருவான பிரமோஸ் ஏவுகணை, இந்தியாவின் டிஜிட்டல் தொழில்நுட்பம் ஆகியவையும் சர்வதேச அளவில் வரபேற்பைப் பெற்றுள்ளதையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நிதி ஆயோக் அமைப்பை மத்திய அரசு மாற்றியமைத்துள்ளது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் ஆகியோருடன் மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சவுஹான் அலுவல்சாரா உறுப்பினராக செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி, சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜேபி. நட்டா, எஃகு மற்றும் உருக்குத்துறை அமைச்சர் திரு. எச்டி. குமாரசாமி, சிறு குறு நடுத்தர தொழில்கள் துறை அமைச்சர் திரு. ஜிதன்ராம் மாஞ்சி, பஞ்சாத்ராஜ் துறை அமைச்சர் திரு. ராஜீவ்ரஞ்சன் சிங், சமூகநலம் மற்றும் அதிகாரமயமாக்கல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார், சிவில் விமானப் போக்குவரத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு, பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. ஜுவல் ஒரம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி, உணவு பதனிடுதல் துறை அமைச்சர் திரு. சிராக் பஸ்வான், திட்ட அமலாக்கத்துறை அமைச்சர் திரு. ராவ் இந்தர்ஜித் சிங் உள்ளிட்டோர் மாற்றியமைக்கப்பட்டுள்ள நிதி ஆயோக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நிதி ஆயோகின் தலைவராக தொடர்ந்து நீடிப்பார் என்று மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மின்கட்டண உயர்வை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும் என்று பிஜேபி தேசிய மகளிர் அணித் தலைவர் திருமதி வானதி ஸ்ரீனிவாசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின்கட்டண உயர்வால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதோடு சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களும் பெரிதும் பாதிக்கப்படும் என்று கூறியுள்ளார்.

எனவே மின்கட்டண உயர்வை தமிழக அரசு மறுபரிசீலனை செய்து குறைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

மின்கட்டண உயர்வை தமிழக அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்றும், மாதாந்திர மின் கணக்கீட்டை அமல்படுத்த வேண்டும் என்றும் மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் மாநில செயலாளர் திரு. கே. பாலகிருஷ்ணன் விடுத்துள்ள ஒரு அறிக்கையில், புதிய மின் உற்பத்தி திட்டங்களை அரசே செயல்படுத்தி குறைந்த கட்டணத்தில் மின் வினியோகம் செய்வதுதான் தமிழகத்திற்கு தேவையான மின் கொள்கையாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

தனியாரிடமிருந்து அதிக விலைக்கு மின்சாரத்தை வாங்குவது அதன் மூலம் ஏற்படும் நெருக்கடியை மக்கள் மீது திணிப்பது சரியல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தும் இடைநிலை ஆசிரியர் பணிக்கான தேர்வில் கூடுதலாக ஆயிரம் இடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இடைநிலை ஆசிரியர் பணிக்கான நேரடி நியமனம் தொடர்பான அறிவிப்பை ஆசிரியர் தேர்வு வாரியம் ஏற்கனவே வெளியிட்டிருந்தது.

1768 காலிப் பணியிடங்களுக்கு போட்டித் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்பட இருந்த நிலையில், தற்போது கூடுதலாக ஆயிரம் இடங்களை சேர்த்து ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அதன்படி இடைநிலை ஆசிரியர் பணிக்கான போட்டித்தேர்வு வரும் 21ஆம் தேதி நடைபெற உள்ளது.

இந்தத் தேர்வை எழுத 26 ஆயிரத்து 510 பேர் விண்ணப்பித்துள்ளதாக தேர்வு வாரியம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இஸ்லாமியர்களால் முஹரம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

நபிகள் நாயகத்தின் பேரன் ஹசேன் அலியின் தியாகத்தைக் குறிக்கும் வகையில் முகரம் அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி நாட்டின் பல்வேறு பகுதிகளில் தாஹியா ஊர்வலங்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

கர்நாடக அணைகளில் இருந்து காவிரியில் திறக்கப்படும் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து தமிழகத்திற்கு வரும் தண்ணீரின் அளவு 20 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை ஆகிய மாவட்டங்களின் மலைப் பகுதிகளின் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருப்பூர், தேனி, திண்டுக்கல் மாவட்ட மலைப் பகுதிகளின் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

ஓமன் தலைநகர் மஸ்கட்டில் மசூதி ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இந்தியர் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். மற்றொரு இந்தியர் படுகாயமடைந்துள்ளார்.

------------

இந்தியா – கொரியா இடையிலான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பாக இரு நாடுகளின் பிரதிநிதிகள் இன்று சியோலில் சந்தித்துப் பேச உள்ளனர்.

------------

நீட் வினாத்தாள் கசிவு தொடர்பாக மேலும் 2 பேரை மத்திய புலனாய்வுத் துறையினர் கைது செய்துள்ளனர்.

------------

மிகப்பெரிய திருவிழாக்களில் கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்த செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த ஜார்கண்ட் மாநில அரசு முன்வந்துள்ளது.

------------

தில்லி கலால் கொள்கை தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள அம்மாநில முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் தாக்கல் செய்துள்ள ஜாமீன் மனு மீதான விசாரணை இன்று தில்லி உயர்நீதிமன்றத்தில் நடைபெற உள்ளது.

------------

நாமக்கல் மாவட்டத்தில் சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பால் பதப்படுத்தும் மையம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------

சேலம் மாவட்டத்தில் இந்த ஆண்டு 7 ஆயிரம் கல்லூரி மாணவ – மாணவிகளுக்கு 99 கோடி ரூபாய் கல்விக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அம்மாவட்டத்திற்கான கண்காணிப்பு அலுவலர் திரு. அரவிந்த், மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகளுடன் நேற்று ஆய்வு நடத்தினார்.

------------

காஞ்சிபுரம் மாவட்டம் பழையசீவரம் பாலற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணையை மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு நடத்தினார்.

------------

திருப்பத்தூர் மாவட்டம் புதூர்நாடு மலைப் பகுதியில் பழங்குடியினர் நல மாணவர்கள் விடுதியை மாவட்ட ஆட்சியர் திரு. தர்ப்பகராஜ் நேற்று திறந்து வைத்தார்.

------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் கோவை அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் திருச்சி அணியை வென்றது.

கோவையில் நேற்று நடைபெற்ற போட்டியில் முதலில் விளையாடிய திருச்சி அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 124 ரன் எடுத்தது.

125 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய கோவை அணி, 16 புள்ளி ஒரு ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டியது.

கோவையில் இன்று நடைபெற உள்ள போட்டியில் திண்டுக்கல் அணி – திருப்பூர் அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி மாலை மணி 7.15க்கு தொடங்குகிறது.

-------------

ஸ்வீடன் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் வெற்றி பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற போட்டியில் சுமித் நாகல் 6-4, 6-3 என்ற செட் கணக்கில் ஸ்வீடனின் **Elias Ymer**-ஐ வென்றார்.

நாளை நடைபெற உள்ள காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அவர், அர்ஜெண்டினாவின் **Mariano Navone**-ஐ எதிர்கொள்கிறார்.

--------------

ஆசியக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்காக இந்திய அணியினர் இலங்கை சென்றுள்ளனர்.

<<<<>>>>